# ஆத்மஜோதி



"அருணோதயம் போல் என் அறிவிலே வருவாய்
அரகரசிவசிவ ஆனந்த குருவே"

ஓம்

# ஆத்ம ஜோதி

"எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே" – சுத்தானந்தர்.

சோதி 6 | கரஹூ பங்குனிமீ சுடர் 5

பொருளடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| உபநிடதம் | | 113 |
| பரசிவவணக்கம் | சேர், பொன். இராமநாதன் | 114 |
| நேரமில்லை | ஆசிரியர் | 115 |
| பக்திப்பிரகாசம் | சிவானந்தமுனிவர் | 119 |
| சிவராத்திரி நினைவு | | 120 |
| ஒப்பற்றஜோதி | சரஸன் | 121 |
| மனமும் புத்தியும் | டார்பன் ச. மு பிள்ளை | 123 |
| நலம்தரும்சொல் | | 126 |
| புராதனக்கோவில்கள் | திருவருள் | 128 |
| நலம்தரும்சொல் | 127ம்பக்கத்தொடர்ச்சி | 132 |
| சிருஷ்டி | | 133 |
| இனியும் வருமோ | பரமஹம்சதாசன் | 135 |
| சாதனைக்குறிப்புகள் | விசாகர் | 136 |
| செய்தித்திரட்டு | | 139 |
| தெல்லிப்பளை காசியிற்பிள்ளையார் | கணேசலிங்கம் | 140 |


ஆத்மஜோதி
(ஓர் ஆத்மீகமாதவெளியீடு)

ஆயுள் சந்தா ரூபா 75/ வருடசந்தா ரூபா 3/-
தனிப்பிரதி சதம் 30

ஆத்மஜோதி நிலயம் நாவலப்பிட்டி இலங்கை

## உபநிடதம்.

ஞானசாதன நிலை.

"பொன்போல விளங்குமனஞ் சஞ்சலத்தாற் குரங்காம்
புத்திவிசா ரித்தறியும் பொலிவதனு லரவாந்
தன்போல விலையெனலா லகங்கார மதமா
தனைநிகராஞ் சித்தமொரு தன்மையினு ஞமா
மின்போலுஞ் சலனமன மசையாம னிறுத்தி
விசாரிக்கும் புத்தியினை மெய்ப்பொருட்பால் விடுத்து
உன்போடு வருமகங்காரத்தினையுங் கடிந்தால்
வைத்தவிடத் திருந்துசித்த மகத்துவமுந் தருமே"

இதன்பொருள்:- இச்சாசொரூபமாயிருக்கின்ற பொன்போலப் பிரகாசிக்கின்ற மனமானது சஞ்சல வியாபாரத்தால் குரங்குபோல்வதாகும். புத்தியானது சகலத்தையும் விசாரித்து அறிகின்ற பொலிவையுடைமையால் கண்ணே செவியாகச் சகலமந்திரங்களையும் அறிகிற பாம்புபோல்வதாகும். சிதாபாச சொரூபமாயிருக்கின்ற அகங்காரமானது தனக்குச் சமானமில்லையென்று செருக்குற்று நிற்கையால்மதத்தினுல் தன்னைமறந்திருக்கிற யானைபோல்வதாகும். நிகிருஷ்ட விஷயத்திலே தனக்குத்தானே ஒப்பாயிருக்கிற சித்தமானது விஷயசாதனையை ஏகாக்கிரஞ்செய்கிறதன்மையால் கஞ்சி வார்க்கிறவன் பிறகே திரிகிற நாய்போல்வதாகும் ஆகையால் மின்னல்போலத்தோன்றி மறைகின்ற மனத்தைச்சலனப்படாமல் நிறுத்தி. விசாரணை செய்கின்ற புத்தியைத் தானேதானுயிருக்கின்ற அறிவுடனே கூட்டி, வலிமையோடு எழுகின்ற அகங்காரத்தையும் கொன்றால், சித்தமானது வாசனுக்ஷயமாய் புத்திக்குச் சாக்ஷியானசைதன்னியத்தைப்பிரகாசிக்கப்பண்ணும்

## பரசிவ வணக்கம்.

திருவாசகத்திலுள்ள போற்றித்திருவகவலிலிருந்து சேர். போன். இராமநாதனால் தொகுக்கப் பெற்றவை.

பரம் பரஞ் சோதிப் பரனே போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
அடியொடு நடுவீ றானாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பகர்ந்தாய் போற்றி
மூவா போற்றி, நான்மறை முதல்வா போற்றி
உரை உணர்விறந்த ஒருவா போற்றி
எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
அலைந்தேன் நாயேன் அடியேன் போற்றி
தளர்ந்தேன் அடியேன் தமியேன் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
அஞ்சேல் என்றிங்கு அருளாய் போற்றி
போற்றி போற்றி ஜய ஜய போற்றி



# நேரமில்லை:

ஆசிரியர்

"நேற்றைக்கு வெள்ளிக்கிழமை கோவிலில் சந்திக்கலாமென்று வந்தேன்; கோவிலில் உங்களைக் காணவில்லையே."

"நிறைந்த வேலை; மூச்சுவிட நேரமில்லை, என்கின்றார் நண்பர்.

"முந்தநாள் ஆத்மானந்த அடிகள் பெரியபுராணப்பெருமையைப் பற்றிப்பேசினார்கள். பிரசங்கம் கேட்டீர்களா? அடியார் பெருமைபற்றியும், சேக்கிழார் கவித்திறன்பற்றியும் பக்தியுடனும் இலக்கியரசனையுடனும் பேசினார்கள். மிகநன்றாயிருந்தது-

"கந்நேரமும் பொழுதும்சரியாயிருந்தது, வீட்டுக்குவந்தால் வீட்டுப்பாடு பார்க்கவேண்டும். மற்றவற்றுக் கெல்லாம்எங்கே பொழுது இருக்கிறது"?

"கதிரேசன் கோவிலில் கந்தபுராணம் படிக்கிறார்கள் குமாரசாமிப்புலவர் உரைசொல்கிறார். மிகநன்றாயிருக்கின்றது- பாலர்களும் கேட்டுஇன்புறும் வகையில் சொல்கிறார். நேற்றைக்குச்சென்றேன்; நால்வர் மாத்திரம் தூணுக்கொருவராக இருந்தார்கள் புலவரவர்கள் முருகபக்தராகையால் ஜனங்களைப்பற்றி அவர்கவலையே கொள்வதில்லை. தமது வாக்குமுழுவதையும் முருகப்பெருமானுக்கு அர்ப்பணஞ் செய்தவராகையால் தமது உரையை மக்கள் பாராட்டவேண்டுமென்றோ புகழ வேண்டுமென்றோ விரும்பவில்லை. ஓய்வுநேரங்களில் நீங்களும்சென்றால் பயன் பெறலாமே"

"முன்னொருகாலம் புராணம் படித்தார்கள்; மக்கள்பொறுத்திருந்து கேட்டார்கள்; அதனால் பயன்பெற்றார்கள். தற்காலமோ அணுக்குண்டு போல் வேகமான காலம், புராணம் கேட்கப் பொழுது எங்கே"?

"அமராவதி படம்பார்த்தீர்களா? தவறாமல் பார்க்க வேண்டியபடம்."

"தொடக்கத்திலன்று வீட்டிலுள்ளோர்எல்லோரும் போய் பார்த்தோம். நேற்றைக்குப்பொழுதே போகவில்லை; இரண்டாம் முறையாக நேற்றைக்கும் போய்வந்தேன்."

"குமாரிகமலாவின் நடனம் வருகிறமாசம்பதினைந்தாம்திகதி வருகிறதாம் உத்தரவுச்சீட்டுக்கு இப்பொழுதே தட்டுப்பாடுஏற்பட்டுவிட்டதாம் அச்சடித்த உத்தரவுச்சீட்டு முழுவதும் விற்பனையாகிவிட்டதாம். ஐந்துரூபாஉத்தரவுச்சீட்டு ஒன்று ஏழரை ரூபாய்க்கு வாங்கிவைத்திருக்கின்றேன். நீங்கள் போகவில்லையா"?

"எனக்கும் ஒரு உத்தரவுச்சீட்டு இன்று ஒருவர் கொண்டுவந்து தருவதாகச்சொன்னார். ஐந்துரூபா மேலதிகம் வேண்டுமென்றார்- எதுவானாலும் ஆகட்டும். உத்தரவுச்சீட்டுத்தான் அவசியம் என்றேன். இம்முறைதப்பினால் நாம்எல்லாம் கமலாவின் நடனத்தை எப்பிறப்பில்தான் பார்க்கமுடியும். கமலாவை ஒருமுறை நேரில் பார்த்துவிடவேண்டுமென்பதே அவா."

மேலே நீங்கள் வாசித்தபகுதிகள் சில நண்பர்களின் பேச்சிலிருந்து அப்படியே பிரதி பண்ணப்பட்டவை. ஒருசில விஷயங்களுக்கு நேரமில்லையென்று சொன்னமனிதன் வேறுசில விஷயங்களுக்குக் கூடுதலான பணத்தைச் செலவுசெய்து கூடுதலானநேரத்தையும் செலவு செய்கிறான். இவற்றுக்கெல்லாம் காரணம் என்ன? எதிலே சிரத்தைஉண்டோ! அதற்கு நேரமும்வசதியும் ஏற்பட்டுவிடுகிறது. எதிலேசிரத்தை இல்லையோ அதற்குநேரமும் வசதியும் ஏற்பட்டுவிடுவதில்லை.

சிரத்தை ஏற்படுத்துவது யார்? தானேதான் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். அதற்கு மார்க்கம்யாது? அதற்கு முக்கியமார்க்கம் விசாரமே. நான் யார்? எனது எனதுவாழ்வின் நோக்கம்யாது? நான் ஏன் பிறந்தேன்? பிறப்பின் நோக்கத்திற்காக வாழ்கிறேனா? அதற்காக இன்றுவரை என்ன செய்தேன்? இவ்வினாக்களை வைத்துக்கொண்டு இவற்றிற்கு விடை அறிதல் மூலம் விசாரம்செய்தால் உள்ளத்தில் சிலஉண்மைகள் புலனாகும்

அவ்வுண்மையால் நிலையுள்ளன எவையென்றும் நிலையற்றவை எவையென்றும் அறியலாம். நிலையுள்ளவை எவையென்று அறிந்த உடனே அவற்றையடைதற்காகிய எண்ணமும் சிரத்தையும் உதயமாகும். அந்தச்சிரத்தையும் ஏற்படுதற்கு எம்பெருமானின் திருவருளே வேண்டும்.

"அவன் அருளாலே அவன் தாள் வணங்கி"

என்றுமணிவாசகரும்



"தவமும் தவமுடையார்க்கும்"

என்று வள்ளுவரும் எவ்வளவு சாதனையின் முதிர்ச்சியால்மக்களுக்குக் கூறினார்கள்.

சிறுகருமம் ஒன்றைச்செய்துவிட்டு நான் செய்துவிட்டேன் என்று மார்பில் தட்டிப்பேசுவோர் எத்தனைபேர்? பத்திரிகைகளில் பிரசுரம் செய்வோர் எத்தனைபேர்?

"என்கருமம் பார்க்கவே எனக்குப்போதுஇல்லையே! பொதுக்கருமங்களில் பங்குபற்றுவதென்றால் சாத்தியமா? என்றுகேட்கின்றார்கள் சில அன்பர்கள். தன்கருமம் என்றால் என்ன? அதற்கு வள்ளுவர் கூறும் விடையைச் சிந்தியுங்கள்:

"தவஞ் செய்வார் தங்கருமம் செய்வார்"

இதுவரை பார்த்த விஷயங்களிலிருந்து ஒரு உண்மைபுலப்படுகிறது. இலௌகீக கருமங்கள் பார்ப்பதற்கு போதிய அவகாசம் இருக்கிறது. ஆத்மீககாரியங்கள் பார்ப்பதற்கு மாத்திரம் நேரம்கிடைப்பதில்லை. அப்பர் சுவாமிகளிலும் பார்க்கவா நாங்கள் தொண்டர்களாகிவிட்டோம்.

"நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையா தொருபோதும் மறந்தறியேன்"

நான் எதுசெய்யினும் நெஞ்சு உன்னிடத்திலேயே இருக்கிறது. உன்நினைவு ஒருபோதும் மறந்தறியேன் என்று நேரம்முழுவதையும் ஆத்மீக வாழ்வுக்கே அர்ப்பணித்துவிட்டார். நாமோ என்றால்ஒருநாளைக்கொருதரம் ஒருநொடிப்பொழுதேனும் அவனை நினைப்பதற்கு நேரமில்லை என்கின்றோம். பின் வரும்பாடலைச்சற்றே சிந்தித்தால் நமது பிழையைநாமே அறிந்துகொள்ளலாம்

பல்லவி

"ஒருநாளைக் கொருதரம் ஒருநொடிப் பொழுதேனும்
உன்னைப் படைத்தவனை எண்ணிச் சுகித்ததுண்டோ—மனமே

அனுபல்லவி

திருநாளும் தேரும் என்று தேடியலைந்ததல்ல
சிந்தனை அலையாமல் தியானத்தில் நிறுத்தியே [ஒரு]

### சரணம்

1 விடியுமுன் விழித்தனை வெளுக்குமுன் வீட்டைவிட்டாய்
வெவ்வேறு இடத்துக்கு வெளவால்போல் ஓட்டமிட்டாய்
உடலும மனமும் சேர்ந்து ஓய்ந்திட வீடுவந்தும்
உண்ணும் பொழுதுங்கூட எண்ணம் நிலைப்பதில்லை (ஒரு

2 அரைக்காசுக்கானாலும் ஒருநாள் முழுதுங்காப்பாய்
ஆயிரம்பேரையேனும் அனுப்பின்றிப்போய்ப்பார்ப்பாய்
உரைப்பார் உரைகட்கெல்லரம் உயர்ந்திடும செல்வனை
உன்னுள் இருப்பவனை எண்ணிடநேரமில்லை [ஒரு]

3 சிலநாளைக்கதிகாரம் செய்யுமொருவர்க்கஞ்சி
செய்யச்சொல்வதையெல்லாம் செய்வாய்நீ பல்லைக்கெஞ்சி
பலநாளும் ஜன்மமெல்லாம் பாலிக்கும் அதிகாரி
பரமனைநினைக்கவும் ஒருகணம் உனக்கில்லை. [ஒரு)

4 நாளும் கிழமையென்று நல்லவர்உரைத்தாலும்
நாளைக்கு ஆகட்டும் வேலை அதிகம் என்பாய்
பாழும்பணத்தைத்தேடிப் படும்பாடு கணக்கில்லை
பகவானை எண்ணமட்டும் அவகாசம் உனக்கில்லை (ஒரு]

எம்மில்பலர் காலையில் சிறிது நேரமும் மாலையில் சிறிதுநேரமும்கூட கடவுட்சிந்தனைக்கென்று செலவிடுவதென்றால் "இயலுவதில்லையே" என்று கூறிவிடுகிறோம். உண்மை அப்படியல்ல சிரத்தை எதிலிருக்கிறதோ அக்காரியத்துக்கு தினமும் எப்படியும் நேரம்கிடைத்துவிடும்: "நேரமில்லையே" என்பதன்பொருள் சிரத்தையில்லையே என்பதுதான்,



# பக்திப் பிரகாசம்.

[ஸ்ரீசிவானந்தமுனிவர் திருக்கழுக்குன்றம்]

அடைதற்கரிய மானிடப்பிறவியெடுத்தும் அப்பிறவியின் பயனை அடையாதிருத்தல் அறியாமையாகும்- ஒவ்வொரு ஜீவனும் உத்தமமான ஓய்வைப்பெறுதல்வேண்டும். அவ்வோய்வாற்றான் உண்மை உணரமுடியும். ஓய்வின் உறைவிடம் இறையாகும் இறையை அறிதலே இன்பம். இவ்வின்பத்தையடைய சர்வ விவகாரங்களிலும் சம்நோக்குடனிருந்தால் இறைவனது இருப்பை உணரக்கூடும். இவ்வுணர்வால் இறைவனிடத்திலே ஓய்வையும் அமைதியையும் பெற்றுவாழும் வாழ்க்கை கிடைக்கும், இழ்வாழ்க்கையே இறைவனது சாந்நித்தியத்தை பெற்றுச் சாந்தியுறச் செய்யவல்லது. இதன்றித் தனது சொந்தக்குறையினாலுண்டாகும்குதர்க்கத்திற்கு இறைவனை ஆளாக்குதல் மடமையிலும் மடமையாகும். அவன் பாரபட்சமுடையவன் அல்லன், இன்பத்திற்கும் துன்பத்திற்கும் அவனே சாட்சி ஆவான். இவ்வறிவு நீடிப்பதற்கு மனமாசற்றவன் சர்வத்திற்கும் சாட்சிமாத்திரமாயிருக்கின்றான். இவனே உண்மையில்இறையின் இருப்பைஅறிந்துதெரிந்தவனும் உத்தம ஞானியுமாவான்.

நமக்கு வேண்டும் வேலையாளைத் தரும் ஒருவர் அவனையடைந்தவுடன் அவனுக்கு வேண்டும்சௌகரியங்களைத் தயக்கமின்றிச் செய்துகொடுத்தாலல்லவோ அவ்வேலையாளை வைத்துநடத்திய பயனைப்பெறலாம்- அதுபோல் மனம் படைத்தோரைஉலகப்பொருளினின்றும் பிரித்துவைத்து அதன்பலனை அடைதல் அவசியமாகும்: மனம் இறந்தொழிந்தாலே பலன்கிடைக்கும். அறியாதார் மனம் அடக்கல் அருமையாகும், கடினத்திலும் கடினமென எண்ணுவர், அத்தகையகஷ்டங்கள் ஒன்றுமில்லை. துஷ்டமிருகங்களிடம் முதலில்பெயரளவிலேயே மனிதர்களுக்குப்பயம் ஏற்படுகிறது. பின்பார்க்கப் பயப்படுகின்றனர். பின் அதனுடன் பழகப்பயப்படுகின்றனர். ஆனால் பழகினவனுக்கு பயம் என்பதுமறதிஸ்தானத்தை அடைந்து சர்வசாதாரணமாய் அதனுடன் சேர்ந்து வாழ்கிறான். அதுபோன்று முதலில் மனதைச்சரிப்படுத்துவது கஷ்டமானாலும் நாளடைவில் நன்மை பயக்கும்.

திடீரென துஷ்டமனதுடன் அதிகப்படிக்கத்தால் அபாயம் ஏற்படும். மனம்சென்றவிடமெல்லாம்விட்டுப்பின் இதயத்து அழுத்துங்கள். அப்பொழுது உங்கள்வயப்படும்; இன்புறுவீர்கள்.

மனம் அடக்கவேண்டுமானால் அதற்குவழிகாட்டி வேண்டுமென எண்ணுவீர். அதுவும் அவசியமே. ஆனாலும், அவனை அடையஆசையும் படுவீர்; இறைவன் தன்னை ஆன்மாக்கள் உணரவேண்டும்என்ற ஆசை மிகுதியுமுடையவன். நீங்களும்அவனையடைந்து ஆன்மசித்திபெறவேண்டும் என்று பூரண ஆசையாகிய நிராசை கொள்ளுவீர்களானால் எளிதில் இரண்டும் ஒன்றுபடும் இவையன்றிப் பேராசைமட்டும் கொண்டு வழிகாட்டியைத்தேடுவது. வெண்ணெயிருக்க நெய்க்கலைந்தகதையேயாகும். உண்மையில் நீங்கள் ஆண்டவனையடைய வேண்டுமானால் முதலில் உங்கள் பூரணக்கொள்கைகள்! எல்லாவற்றையும் அவனிடம் சமர்பியுங்கள்- அப்பொழுதும் அவனும் தனதுவேலையைச் செய்யத் தவறான். தவறாசபோது இயற்கையாகவே வழிகாட்டி நெருங்குவான், இவ்வாறு செய்யாமல் எவ்வளவுகாலம் சிரத்தைகொண்டாலும் வீணேயாகும் இதற்குப்பத்தியே முதலில் சிறந்தவழியாகும். அவ்வழியேசென்றால் அங்குவழிகாட்டியும் தென்படுவாள்.

---

## சிவராத்திரி நினைவு

இராகம் சாமா — தாளம் ஆதி

பல்லவி

சிவனை நினைமனமே—என்றும் சிவனைநினை

அனுபல்லவி

சீரியசாந்தத்தில், சிறந்து நீ வாழ்ந்திட [சிவ

சரணம்

ஒவ்வோருதினமும் ஒவ்வோருகணமும்
ஓய்வுனக்கிருக்கிலும் ஓய்விராதிருப்பினும் [சிவ
இவ்வுடற்றுற்றிடும் இன்பமும்துன்பமும்
ஈசனெம்மக்கருள் ஈய்ந்திடற்காதலால் [சிவ

எவ்விதவாழ்விலும் எவ்விதத்தாழ்விலும்
ஏவலாள் பணியினும் ஏவலேபுரியினும் [சிவ

செவ்வியமனத்துடன் சிவன்கழல் துதித்து நீ
சேவித்துவந்திடச் சேர்ந்திடும் திருஅருள் (சிவ

---பொன்னுரம்



# ஒப்பற்றஜோதி.

[சரஸன்]

உலகநாடுகளில் பெரும்பான்மையான மக்கள் கடவுள் உண்டு என்ற நம்பிக்கை கொண்டவர்களாய்த்தான் உள்ளனர். ஆயினும் இன்று உலகின் சிலபாகங்களில் நடைபெறுங்காரியங்களைக்கவனித்தால், அந்தநம்பிக்கை மனப்பூர்வமானதுதானா? என்று ஐயுறத் தோன்றுகின்றது,

கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் செய்யக்கூடிய காரியங்கள் என்ன? இதைக் கேட்பதற்கு முன்பு, கடவுளை நம்புபவர்கள் என்று யாரைக்கூறமுடியும்? என்றுகேட்பது தகும்.

சுயநலம், உலகநாசத்துக்கு அடிகோலும் செயல்கள்புரிதல் துவேஷமனப்பான்மை, "எல்லாம் நம்மால் ஆகும் விஷயந்தான்" என்ற மனப்பான்மைகொள்ளல், வலியவர் எளியவரை அடிமைப்படுத்தல், இன்னும் இவைபோன்ற விரும்பத்தகாத செயல்களைப் புரியாதவர்களையே உண்மையில் கடவுளிடம் நம்பிக்கையும் பக்தியும் கொண்டவர்களாய்க் கருதமுடியும்.

இன்று உலகில் நடைபெறும் விஷயங்களைப்பார்த்தால் கடவுள்மனப்பான்மையே மக்களின் மனதைவிட்டு அகன்றுவிட்டதாய்த்தான் தோன்றுகிறது. மனிதசக்தியையும் மீறியசக்தியொன்று இயங்கிக்கொண்டிருக்கிறது என்று கூறுபவர்கள் பைத்தியக்காரப்பட்டம் பெறத்தான் தகுதியானவர்கள் என்ற நிலைமை ஏற்பட்டுவிடுகிறது.

இந்தப்பயங்கரமான சூழ்நிலைக்கிடையில் பாரதநாட்டு மக்களாய்ப்பிறந்தநாம் பாக்கியசாலிகள் என்றுதான் கூறவேண்டும். தெய்வபக்தியிலும் சரி, கடவுள் வழிபாட்டிலும்சரி, ஆத்மபலத்திலும்சரி, நம்பெருமை மிக்க பாரதநாட்டுடன் வேறெந்த நாட்டையும் ஒப்பிடமுடியாது. நம்நாடுமட்டுமன்றி உலகநாடுகளின் க்ஷேமத்திற்கும் வழிவகுத்துக்கொடுத்துள்ள நம் வேதங்களும் சாத்திரங்களும் நம் நிரந்தரச்செல்வங்களாகும்.

இடைக்காலத்திலே பலமாறுதல்கள் ஏற்பட்டு, பல விரும்பத் தகாத நிலைமைகள் ஏற்பட்டபோதிலும் பாரதநாட்டு ஆத்மபலம் குன்றும் அளவுக்குக் கீழ்த்தரமான நிலையை அடையவில்லை. இதனடிப்படையென்ன? மேலே கூறியது போல் அறநெறியும் தெய்வவழிபாடும் நம்நாட்டில், தழைத்தோங்குவதுதான் என்று சிலர் யுக்திவாதம்செய்யலாம். தெய்வவழிபாடும் அறநெறியும் தழைத்தோங்கியும் ஏன் நம் தேசத்தைப் பல இன்னல்கள் சூழ்ந்துள்ளன?

ஒரே பதில்தான் அதற்குண்டு: மனமும் செயலும் வெவ்வேறாய்ப்போனதே. தெய்வபக்தியும் அறநெறிப்பற்றும் உள்ளதாகப் பாவனைசெய்யும் மனப்பான்மை மாறவேண்டும். உண்மையிலே அவற்றை அனுட்டிக்கவேண்டும். தெய்வசம்மதத்திற்கும் மனச்சாட்சிஒப்பவும் காரியங்கள் செய்யவேண்டும். இன்னல்களுக்கு மூலகாரணம் இவையிரண்டும் புறக்கணிக்கப்பட்டதுதான் என்று கூறுவது தவறில்லை.

கொள்ளையடிப்பவன் இரவில் தூங்குவதில்லை. ஏன்? கொள்ளையடித்தபொருள்களைக்காப்பதில்தான் கவனஞ்செலுத்துவான் இன்னொருவன் அவனைக்கொள்ளையடிப்பானோ என்ற பயம்வேறு. கொள்ளையென்றபாபச்செயலை புரியாமலிருந்திருந்தால் இந்தப்பயமும் அவனுக்கு ஏற்பட்டிராது. பல துர்க்கிருத்தியங்களுக்கு ஒரு பிராயச்சித்தம் என்பதுபோல, பல அதர்மக்காரர்களுக்காக ஒவ்வோர் மஹாபுருஷர்கள் அவ்வப்போது நம்மிடையே தோன்றி தங்கள் ஆன்மஒளியால் அக்கிரமங்களைச் சுட்டெரித்து நம்நாட்டைப் புனிதப்படுத்தியுள்ளனர். இன்னும் நம் நாடு பல மகா புருஷர்களையும் பெறத்தான் போகிறது. உலகின்கண் ஓர் ஒப்பற்ற ஜோதியாய்த் திகழத்தான் போகிறது.





# மனமும் புத்தியும்.

(தென்னாபிரிக்கா டர்பன். ச. மு. பிள்ளை அவர்கள்)

மானிடர்களுக்கு இயல்பாக அமைந்துள்ள சக்திகள் இரண்டு. அவைகள் மனமும், புத்தியும். அந்த இரண்டு சக்திகளும் ஜாக்கிரதையாக வளர்க்கப்படவேண்டும். ஒன்றை மாத்திரம்வளர்த்தால் போதாது. அவற்றில் ஒன்றை க்ஷீணிக்கச்செய்துமற்றொன்றைவளர்க்கலாகாதுஎன்று வேதாந்த சாஸ்திரங்கள்முறையிடுகின்றன.

ஒரு வண்டியில் பூட்டியஜோடிக்குதிரைகளைப்போல் மானிடதேகமென்னும் வண்டியை நடத்திச்செல்ல மனமும் புத்தியும் ஜோடிக்குதிரைகளாகும். இது பகவானுடைய சிருஷ்டி. மனம் ஆற்றவேண்டிய கடமை என்னவெனில், ஜீவன்களிடம் அவன் அனுதாபம் கொள்ளவேண்டும்: ஆனால் எல்லாச் சமயங்களிலும் இக் கடமையை மனம் ஒழுங்காகச் செய்வதில்லை. பல தடவைகளில் தவறிவிடுகிறது.

மனம் வழிபிசகிச்செல்லும்போது அதற்கு நேர்வழியைக் காட்ட புத்தி உதவிக்கு வருகிறது. உதாரணமாக வயோதிகன் ஒருவன் இறக்கும் சமயத்தில் தன்குழந்தைகளை நினைத்தும்இனி பிறக்கப்போகும் சந்ததிகளைநினைத்தும் வருந்துவதைப் பார்க்கிறோம். அப்பேர்ப்பட்ட சமயத்தில்தான் புத்தி தன்வேலையைச் செய்யவருகிறது. “அடே மூடா! குழந்தை குட்டிகளும், நண்பர்களும் ஆஸ்தியும், இந்த தேகத்திற்குள் ஜீவன் உள்ளவரையில் தான். அவைகளெல்லாம் மண்குதிரைகள் போன்றவை. அவைகளை நம்பாதே. இறந்தபின் இறந்தவன் தனியாகத்தான் செல்லவேண்டும், துணை ஒருவரும் வரமாட்டார்கள்” என்று உபதேசம்செய்யும்.

புத்தியானது எப்படி மனதைத்திருத்துகிறதோ அப்படியே மனதும் புத்தியைத் திருத்துவதுண்டு. ஆகவே, எந்த மனிதனுக்குப் புத்தியும் மனமும் வளர்ந்தும், திடகாத்திரமடைந்தும், ஒத்துழைப்புடன் கூடியுமிருக்கிறதோ, அவனே மனிதசிரேஷ்டன்.

தனிமனிதர்கள் சேர்ந்துதான் சமூகம் ஆகிறது. ஆகவே, சமூகத்தில் மானிடர்களின் இருதய கமலத்தினின்று தோன்றும் ஒளிதான் மதம் என்பது. அவர்களுடைய புத்தியினின்று உண்டாவதுதான் நாகரீகம்.

தனிமனிதர்களுக்கு புத்தியும் மனமும் ஒன்றோடொன்று ஒத்துஉழைத்து உதவிசெய்துகொள்ளவேண்டியது எவ்வளவு அவசியமோ, அதுபோலவே, சமூகத்திலும் புத்திசொரூபமான லோகாயத சாஸ்திரங்களும் இயற்கை சாஸ்திரங்களும், இருதய சொரூபமான சமயங்களுடன் சேர்ந்து ஒன்றுக்கொன்று முரண்படாமல் பாலும் தேனும்போல் இரண்டறக்கலந்துவளரவேண்டும்.

ஆகவே, இயற்கை சாஸ்திரங்களுக்கு முரணான சமயவழக்கங்களே சரியென்று பிடிவாதமாக நினைப்பதும், அவைகளே விமோசனத்திற்கு வழியென்று வாதிப்பதும் அதுபோலவே, இயற்கை சாஸ்திரப்பண்டிதர்களும் மதங்களை அலட்சியம்செய்வதும் கூடாது.

மானிடவாழ்க்கையின் லட்சியமென்ன? கண்மூடித்தனமானதும் இயற்கைசாஸ்திரங்களுக்கு ஒவ்வாத மத அனுஷ்டானங்களை பின்பற்றுவதும் அல்ல. அல்லது இருதய சம்பந்தமற்றதான இயற்கை சாஸ்திரப் பாண்டித்தியம் பெறுவதும் அல்ல இவை இரண்டும் கலக்கவேண்டும், அன்பும் ஒளியும் கலக்கவேண்டும். பக்தியும், அறிவும் கலக்கவேண்டும். தத்துவமும் மதமும் சேர்ந்து மலரவேண்டும். அப்பேர்ப்பட்ட மலரானது இயற்கை சாஸ்திரம் வளர்ந்து அறிவு ஆனதை ஒக்கும்.

மனிதனுடைய கண்ணும், காதும்சண்டையிட்டுக்கொள்வதில்லையல்லவா? அதுபோல மதமும், இயற்கைசாஸ்திரமும் சண்டையிட்டுக்கொள்ளலாகாது. இயற்கை சாஸ்திரங்கள் சமயசம்பந்தப்பட்டதாக இருக்கவேண்டும். சமயங்கள் இயற்கை சாஸ்திரத்தைத் தழுவியிருக்கவேண்டும்.

மேற்சொன்ன இந்த ஒற்றுமையானது, இதுவரையில்சமூகத்தில் ஏற்படவில்லையென்றே சொல்லவேண்டும். தனிப்பட்ட மனிதனுக்குக் குறை ஏற்படுவதுபோலவே சமூகமும் குறைவாய் படுகிறது சமூகத்தில் தனிமனிதர்கள் எவ்வளவோபேர்கள் மத



வெறிபிடித்தவர்களாகி விடுகின்றனர்! அதற்குக் காரணமென்ன? அப்பேர்ப்பட்ட மனிதர்களுக்கு புத்தியானது சமயத்தில் தன் வேலையைச்சரியாகச் செய்யாமைதான்.

தற்காலத்தில் உலகத்தில் ஏற்பட்டிருக்கும் நாகரிகம் பரிபூரணமானதல்ல. இயற்கைத்துறவி புதிய அதிசயங்களைக் கண்டுவிட்டதால் தற்கால நாகரிகம் தற்பெருமைகொள்கிறது. ஆனால் உண்மையில் இயற்கையின் மேற்பட்டையைக்கூட நீக்கிப்பார்த்ததாக வில்லை: இயற்கையானது பஞ்ச பாண்டவர்களின் பத்தினி பாஞ்சாலிஉடையைப்போல் முடிவில்லாதது போர்வைகளைப் பரிபூர்ணமாகவிலக்குவதென்பது மானிடயத்தனத்திற்கு எட்டாதகாரியம்மேலும் ஒரு போர்வையை விலக்கினால் அதனடியில்அதிஆச்சரியமாகத் தரிசனமளிக்கும் மற்றொருபோர்வை.

ஆகவே, வேதாந்தம் முறையிடுவதென்னவெனில், "இயற்கைச்சாஸ்திரத்தை வளர்ப்பதற்காக என்ன வேண்டுமானாலும் பாடுபடலாம். ஈரேழு உலகத்தையும் வென்றுவிடலாம். பூமியை இரண்டாகப்பிளக்கலாம். இடி மின்னல் உண்டுபண்ணலாம், கடல் நீரை வற்றச்செய்யலாம். சூரியனை நிறுத்திப் பார்த்துவிடலாம். புதியஉலகத்தையும் சிருஷ்டி செய்துவிடலாம்". ஆனால் இவ்வளவு செய்தும் பயனென்ன? மனதை வெல்லவேண்டும். அதுதான் மானிடனின் லட்சியமாக இருக்கவேண்டும்.

மனதை அடக்காத புத்தி சாதுரியத்தினால் ஆவதொன்றுமில்லை. முன் ஒரு காலத்தில் மகாபலியென்று ஓர் வேந்தன் இருந்தான் அவன் உலகத்தையெல்லாம்ஜயித்துவிட்டான். தேவர்களையும், அசுரர்களையும் மானிடர்களையும் ஜயித்தாகிவிட்டது. அதன் பிறகும் அவன் மனம் திருப்தியடையவில்லை: தன் மந்திரியை அழைத்தான். "மந்திரி, இனி நாம் ஜயிக்கவேண்டியது ஏதாவது உண்டாசொல்." என்று ஆக்ஞைசெய்தான். "ஒன்றுமே இல்லை ஆனால், இன்னும் தங்களுடையமனதைத் தாங்கள் ஜயிக்கவில்லை" என்று மந்திரி சொன்னான்,

"மனிதன் சொந்த ஆத்மாவை இழந்தபின் உலகமெல்லாம் பெற்றாலும் பயனில்லை" என்று ஏசுநாதரும் சொல்லியிருக்கிறார்.

---

# நலந்தரும் சொல்.

உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் நலத்தையே நாடுகின்றன. எல்லாம் தன்னலமே இலக்காக வாழுகின்றனர். மக்கள் தன்னலம்பற்றியே, வைத்தநிதி, பெண்டிர், மக்கள், குலம், கல்வியென்னும் சித்தவிகாரக் கலக்கங்களில் அல்லும் பகலும் அலைகின்றனர். அலைந்து அனுபவம் முதிர்ச்சியடைய தன்னலத்திலும் பிறர்நலமே சாலச்சிறந்தது எனத் தெளிகின்றனர். அப்பொழுதுதான் எவ்வுயிரும் தம்முயிர்போல எண்ணத்தொடங்குகின்றனர் இவ்வெண்ணம் முதிர்ச்சியடைய பிறர்நலமே தன்னலமென எண்ணித்தொண்டாற்றுகின்றனர். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்றும் 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே" என்றும் இச் சமத்துவ நிலைமை [Balanced mind] அடைவதற்கு முன்பலநாட்களாய் உலக இன்பங்களில் பற்றுக்கொண்டு; பணத்துக்கலைவதும், புகழுக்கலைவதும், மற்றும் போகப் பொருள்களுக்கலைவதும் இயல்பு, இவற்றையடைவதற்கு இருபெரும்வழிகளுள: ஒன்று அறவழி. மற்றது மறவழி. மறவழியில் பெறுவன [நலந்தருவனபோன்று] நலத்துக்குப்பதிலாக இடையறுத்துன்பத்தைத்தருவதால், அறிவு மேம்பட அறத்தாறொன்றையே மனிதன் கைக்கொள்கிறான். இந்நிலையில் எதைத்தொடங்கினாலும் இறைவனை நினைத்தே தொடங்கும் எண்ணம் உண்டாகின்றது. இதனாலன்றோ நந்தமிழ் நாட்டார் பொங்கல்விழா, வருடப்பிறப்புக் கொண்டாட்டம், சரஸ்வதிபூஜை போன்ற சீரியபழக்கங்களை வழக்கமாகக் கொண்டனர்.

இனி இறைவனை இப்படியான காலங்களில் வணங்குவதற்கு பலஆசார முறைகள் உள. இவையெல்லாம் உடற்றூய்மைக்கு உதவி, அதன்வழியே உளத்தூய்மைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் உதவுவனவாகும். உலகத்திலுள்ள எல்லா மக்களுள்ளும் காலம், இடம், சந்தர்ப்பம் முதலாயவற்றிற்கு இயைய, இவ்வாசாரங்கள் வேறுபட்டாலும் இலக்கு உள ஒருமைப்பாடேயாகும். எல்லா மதங்களும் உள ஒருமைப் பாட்டுக்கு உகந்தது இறை நாம



செபமே என முழங்கும். இறைவனுக்கு எண்ணற்ற நாமங்களுண்டு பேராயிரமுடைய பெம்மான் என்றும் பெற்ற பேரனந்தம் என்றும் அப்பர் கூறும் மொழிகளை நோக்குக. சர்வ சாதாரணமானபெயர்கள் சிவன், நாராயணன், கிருஷ்ணன், ராமன், கோவிந்தன், குமரன், முருகன், கந்தன், வேலன்; நமச்சிவாய ஈஸ்வரன் என்பன ஆகும்.

இப்பெயர்களோடு தொடர்புள்ள புனித தோத்திரப்பாடல்கள் பலஉள. இப்பாடல்களைப்பாடி, படித்துவர பரமன்மீது பக்தியுண்டாகும். பரம்பொருள்மீது பக்தி (உலவாக்காதல்) வந்ததும், பாடல்களைப்பாடுவதும் நாமத்தை இடையறாது செபிப்பதுமேநன்றெனத் தோன்றும்.

எனெனில் நூல்களில் சிலபோழ்தும், பாடல்களில் பலபோழ்தும், நாமசெபத்தில் இடையறாமலும் இறைவன் சிந்தனை உண்டாகும். இப்படி இடையறா அன்பு பெற்ற அநுபூதிச்செல்வர்கள் பலர் தங்கள் நிலைகளைக் கூறியுள்ளனர். அநுபூதிச் செல்வர்கள் கூற்றெல்லாம் ஒரே தன்மையாக இருக்கின்றன.

வள்ளுவர் "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" என்றும்
சம்பந்தர் "செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம்" ,,
வாகீசர் "குலமிலராயினும் குலத்திற்கேற்பதோர்"
நலமிகக்கொடுப்பது நமச்சிவாயவே" என்றும்
"உன் நாமம் என்னாவில் மறந்தறியேன்" ,,
"நற்றுணையாவது நமச்சிவாயவே" ,,
அருணகிரியார் "ஆடும் பரிவேல் அணிசேவலெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்" ,,
"முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகும் செயல் தந்துணர் வென்றருள்வாய்" ,,
மாணிக்கர் "நமச்சிவாய வாழ்க" ,,
"நமச்சிவாய என்றுன்னடி பணியாப்பேயன்" ,,
வள்ளலார் "நம்பினோர்களை வாழ்விக்கும் நலத்தை" ,,
"நன்மையென்பன யாவையும் அளிக்கும்
நமச்சிவாயத்தை நெஞ்சில்" ,,

புராதனக்கோவில்கள் 5.

# திருக்கோவில் சின்னக்கதிர்காமம்

திருவருள்

புராதனக் கோவில்களைத் தொடர்ந்து படித்த அன்பர்கள் தங்களது விருப்பு, வெறுப்புக்களை வெளியிட்டுள்ளார்கள். அன்னார்கட்கு சுருக்கமாகவேனும் பதிலளிக்கவேண்டியது எம்கடனாகும்.

கோவில்களின் வரலாறுகள் சுருங்கிவிட்டன, விரிவாகவேண்டுமென்கின்றார்கள் ஒருசிலர். அதனை நாம் வரவேற்கிறோம். ஈழநாட்டிலுள்ள கோவில்களின் வரலாறுகளும், கர்ணபரம்பரைக் கதைகளும், புகைப்படங்களும் எம்மால் தொகுக்கப்பட்டுள்ளன அனைத்தையும் திரட்டி ஓர் அன்பர் நூலாகவெளியிடமுன் வந்துள்ளார். ஆதலினால் அந்நூற்கு ஆதாரமாகவே யாம் ஆத்ம ஜோதியில் வெளியிடமுன்வந்தோம், பூரணவிரியுவேண்டுமென்பவர்கள் நூல்வெளிவந்த காலையில் ஓர்பிரதியை வாங்கிக்கொள்ளுதல் சிறந்ததல்லவா?

புராதனக் கோவில்களின் இலக்கத்தொடர்பு கோவில்களின் உற்பத்தியைக்கொண்டாவென்று ஓர் அன்பர் எழுதுகிறார். யாம் கோவில்களின் ஆதியுற்பத்திக் காலத்தைக்கொண்டுஎழுதவில்லை, அதாவது கோவில்களின் எண்ணிக்கையை உயர்த்தவே யாம் தொடர் இலக்கத்தை ஆளுகின்றோம். ஒருகாலத்தில் இத்தனை புராதனக் கோவில்கள் நம்நாட்டில் இருக்கின்றனவாவென்று நீங்கள் ஐயுறுவீர்கள்.

கிழக்கு இலங்கையில் கண்ணகி வழிபாடும் கண்ணகிஆலயங்களும் புராதனமானவைகள். அவைகளை ஏன் எழுதவில்லையென்கிறார் ஓர் கிழக்கு வாசி.

கிழக்கு இலங்கையில் கண்ணகிவழிபாடு ஈழ வள நாட்டிலே சிறந்ததுதான். அதனையிட்டுயாம் அதாவது வழிபாட்டின் வரன்முறையையும் பல கண்ணகிஆலயமாண்புகளையுமிட்டு சில மாதங்கட்கு முன்னர் வானொலியில் விரிவுரை நிகழ்த்தினோம்,



அதனை ஆதாரமாகக்கொண்டு கெதியில் யாம் கண்ணகி ஆலயங்களை ஆரம்பிக்கிறோம்.

புராதனக் கோவில்களில் திருக்கேஸ்வரம், கதிர்காமம், கோணேஸ்வரம் ஆதியவைகளே சிறந்தன. அவைகளை ஏன் எழுதவில்லையென்கிறார் ஓர் கதிர்காமவாசி.

வாஸ்தவம், மேற்படி கோவில்களை ஈழநாட்டில் அறியாதவர்களில்லை. ஆதலினால் முக்கியமாக அறியாத கோவில்களை முன்னர் எழுதி அறிந்த கோவில்களைப் பின்னர் எழுதுவதுதானே கடன். கோவில்களின் வாலாறுகளில் பக்திரசம் ததும்பவேண்டுமென்கிறார், ஓர் சமய அபிமானி. அன்னாரின் கூற்றை யாம் மிகவும் அன்புடன் வாவேற்கிறோம். பக்திநடையில் கோவில்களின் வரலாறுகளை எழுதினால் அதனை விரும்பிப் படிக்கக் கூடியவர்கள் மிகவும் சிலரே! ஆதலினாற்றான் பாலன் முதல் பட்டதாரிகள் வரையும் படித்து இன்புறத்தக்கதாக யாம் எழுதிய தமிழ்வசன நடையைக் கையாளுகிறோம்.

இன்னும் பல அன்பர்கள் எழுதுகிறார்கள் அன்னார்கட்கு எம் வணக்கம் உரித்தாகுக

மட்டக்களப்பிலிருந்துசுமார் 46மைல்களுக் கப்பாலுள்ள திருக்கோவிலென்ற கிராமத்தை அழகுறச்செய்கிறது சின்னக் கதிர்காமச்சந்நிதி. இதன்கண் எழுந்தருளியிருக்கும் சித்திரவேலாயுதர் என்ற சிறப்புப்பெயரைக்கொண்ட முருகவேளின் புகழ் வானளாவப்பறந்தது. ஆம் சின்னக் கதிர்காமத்தின் பெயரைக்கொண்டே கிராமத்திற்கும் பெயர் ஏற்பட்டதெனில் அவரின் புகழ் வரையறுக்கமுடியாது.

பலநூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குமுன்னர் இன்று திருக்கோவிலென்றழைக்கப்படும் கிராமம் கந்தப்பாணந் துறையென்று வழங்கப்பட்டுவந்தது. இக்காலையிற்றான் கண்டியில் நாயக்கமன்னராட்சி செவ்வனே நடைபெற்று வந்தது. விக்கிரமசிங்கனின் பெரியதந்தையான இராசாதிராசசிங்கன் (1780-1798] செங்கோல்செலுத்திய காலையிற்றான் இவ்வாலயம் எழுப்பப்பட்டதென்று சொல்லலாம். அப்போது சின்னக் கதிர்காமத்தின் முகப்புவாசல் கடலைப்பின்னோக்கிக் கட்டப்பட்டது. கும்பாபிஷேகம் நடத்திமுடிந்த அடுத்தநாள் மக்கள் சென்று பார்

க்கும்போது கோவில் வழமைக்கு மாறாக கடலைமுன்னோக்கித்திரும்பியிருக்கக்கண்டனர். எந்தவிதமான சிதைவும் இல்லாதுஆலயம் மறுபக்கமாகத்திரும்பியிருந்தமையினால் ஆண்டவனின் சந்நிதிக்கு திரூக்கோவில் என்ற காரணப்பெயரைச்சூட்டினார்கள். காலகதியில்கோவிலின் பெயரே ஊருக்குமாகி கந்தப்பாணந்துறை என்ற நாமம்மறைந்து திருக்கோவிலென்று வழங்கலாயிற்று.

கோவிலின் அர்ச்சகரான "வேதகிரியார்" என்பவர் மன்னனிடஞ்சென்று எம்பெருமானின் திருவருளைக்கூறினார், அதனை கேட்ட மன்னன் அவருக்கு ஏராளமான சன்மானங்களைக் கொடுத்து சின்னக்கதிர்காமப்பெருமானை நான் வந்து சேவிக்கிறேன் என்று கூறினான். அன்றுதொட்டு சின்னக்கதிர்காமம் என்றபெயர் வழங்கலாயிற்று. அந்நாட்களில் கண்டியிலிருந்து கதிர்காமம்வரையும் ஓர்பாதை அமைக்கப் பட்டிருந்தது. அதனை மக்கள் "கண்டியன்கட்டு" என்றழைத்தார்கள். ஆனால் பாதைபழிந்துவிட்டது. அதன் பெயர்மட்டும்இன்னும் சிரஞ்சீவியாகத்திகழ்கிறது.

மன்னன் அடிக்கடிவந்து சின்னக்கதிர்காமச் சித்திரவேலாயுதரைச் சேவித்துச்சென்றான். அவனுக்குப்பின்னர் முடிசூடிய சிறிவிக்கிரமசிங்கனும் எம்பெருமானை தவறாது வந்து சேவித்துச் சென்றிருக்கிறான்.

கண்டிமன்னர்களால் போற்றப்பட்ட தலம், கதிர்காமயாத்திரீகர்களுடைய வணக்கத்திற்கும் உரியதாகத் திகழ்கிறது. கதிர்காமப்புண்ணிய பூமியில் மிதிக்கமுன்னர் திருக்கோவில்புண்ணியபூமியில் மிதித்து சின்னக்கதிர்காமத்தில் பள்ளிகொண்டிருக்கும் சித்திரவேலாயுதரைச் சேவித்து வணங்கித்தான் மேலே செல்லுவார்கள்.

எம்பெருமானின் ஆலயம் பண்டையவழமைப்படி அமைக்கப்பட்டிருப்பதனால் புதுமையானவிசித்திரங்க ளொன்றுமில்லை. ஆலயம் சிறியதுதான். சுமார் 40 அடி நீளம் கொண்டதாகத்திகழ்கிறது. ஆனால் மூலஸ்தானத்தை ஆதாரமாகக்கொண்டு எழுப்பப்பட்ட சிகரம் புதுமையானது; பக்திவெள்ளத்தை அள்ளித்தெளிக்கத்தக்கதான சிற்பங்கள் ஆண்டவனின் அருளை அடுக்காகக்



காட்டும்விந்தையில் எவராவது சொக்கி எம்பெருமானைச் சேவியாது செல்லமாட்டார்கள்.

கோவிலின் முன்பு ஓர்மணிமண்டபம் எழுப்பப்பட்டுள்ளது, இதனைப்பிற்காலத்திற்றான் நிர்மாணித்தார்கள். இதனுள் கருங்கல்லினால் செதுக்கப்பட்ட ஓர்பலிபீடத்தைக் காணுந்தோறும் மனதிலே பக்திவெள்ளம் ஊற்றெடுத்து கரைபுரண்டோடும். இதில் முன்னர் மிருகங்களைப்பலியிட்டார்கள். தற்போதுதேங்காய்களை பலியிட்டு முருகவேளைச் சேவித்துச் செல்கிறார்கள் பக்தகோடிகள்.

முன்னர் இவ்வாலயம் ஒரு சாராருக்கு மட்டும் சொந்தமாக இருந்தது. தற்போது அனைவருக்கும்சொந்தமாகத்திகழ்கிறது. தீண்டாமையென்ற பேய்க்கு முதல்சாவுமணியடித்த சின்னக்கதிர்காமத்தை மெச்சாதவர்கள் கிடையாது.

கதிர்காமத்தைப்போன்றே இங்கும் 21 திருவிழாக்களை நடத்தி ஆடிப்பூரணையில் தீர்த்தோர்ச்சவத்தை எதிரேயுள்ள ஆழ்கடலில் நடத்துவார்கள். கோவிலைப்பஞ்சாயக்குழுவினர் பராமரித்து வருகிறார்கள். இவர்களைக்கோவிலார் என்று சிறப்பு விருதுடன் அழைப்பார்கள்:

கோவிலில் அர்ச்சனை நடத்தி ஆண்டவனுக்கு நைவேத்தியம் செய்து வருபவர்கள் பரம்பரையாக அன்றுதொட்டு இன்றுவரையும் தந்தைக்குப்பின்மகன் என்ற தோரணையில் இருந்துவருவது எம்பெருமானின் திருவருளேயாகும்.

கிழக்கிலங்கையில் தனியொரு மாண்பைக்கொண்ட சித்திரவேலாயுதர்சன்னதி சின்னக்கதிர்காமமென்றுபோற்றப்படுவது உண்மையில் தனியொரு பக்திக்கு இடமானது. அந்தவகையிற்றான் இத்தலம் கதிர்காமத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது.

ஈழநாட்டிலும் இந்தியநாட்டிலுமிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்களைத் தன்வசம் வரவழைக்கும் சக்தியைக்கொண்ட கதிர்காமப்பெருமானின் அருள் சின்னக்கதிர்காமத்திற்குப் பரவியுள்ளது. ஆம் அந்தவகையில் கிழக்கு இலங்கையினூடாகக்கதிர்காமத்தைத் தரிசிக்கச்செல்லும் பக்தர்களின் வணக்கத்திற்கு

ரிய சின்னக்கதிர்காமச் சித்திரவேலாயுதரின் புகழ் திக்கெட்டும் பரந்தது. தன் அருளைத் தெள்ளெனக்காட்ட கோவிலைத் திருப்பி வைத்த சித்திர வேலாயுதரின் பெருமை வானளாவப் பரந்தது அப்பெருமானைச் சேவித்து வணங்கிப் பிரசாதம்பெறுவது வாழ்வில் ஓர் புனிதமான திருநாளாகும்.

127ம் பக்கத் தொடர்ச்சி (நலந்தரும் சொல்)

நக்கீரர் "ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகா! என்றோதுவார் முன் என்றும்

கூறியமந்திரமொழிகளைக் கவனித்தால்

ஞானம்பெறவும், மெய்ப்பொருள் காணவும்; உண்மையை உணரவும்; வீடடையவும், இறைவனைக்காணவும், எவ்வகை இன்பத்தை எய்தவும் சொல்லறச் சும்மா இருக்கவும் நினைப்பற நினைக்கவும், எக்காலத்திலும் எந்நிலையிலும் எவர்க்கும் ஏற்றதோர் நேரிய வழி.

இறை நாம பஜனையே, சிவநாமசிந்தனையே; நிறைநாம செபமேயாகும். இதனை

"குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுந்துயர் ஆயின எல்லாம், நிலந்தரும் செய்யும், நீள்விசும்பு அருளும் அருளொடு பெருநில மளிக்கும், வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயினசெய்யும், நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்."

என்னும் தேன்மதுரச்சுவையில் திருமங்கையாழ்வார் எவ்வளவு தெளிவாகக்கூறியுள்ளார்.

சிவனடியார் 'நாராயணா' வென்னும் இடத்தில் 'நமசிவாய என்று பாடி நயக்கலாம். அப்பனே, நலம்பெற வேண்டுமா? வேண்டுமாயின், 'நாராயணா! 'நமச்சிவாய!/ முருகா! என்றுசொல் இச்சொல்லே ஆமாநலம்தரும் நலம் தரும் சொல்!



அதனை ஆதாரமாகக்கொண்டு செதியில் யாம் கண்ணகி ஆலயங்களை ஆரம்பிக்கிறோம்.

புராதனக் கோவில்களில் திருக்கேஸ்வரம், கதிர்காமம், கோணேஸ்வரம் ஆதியவைகளே சிறந்தன. அவைகளை ஏன் எழுதவில்லையென்கிறார் ஓர் கதிர்காமவாசி.

வாஸ்தவம். மேற்படி கோவில்களை ஈழநாட்டில் அறியாதவர்களில்லை. ஆதலினால் முக்கியமாக அறியாத கோவில்களை முன்னர் எழுதி அறிந்த கோவில்களைப் பின்னர் எழுதுவதுதானே கடன். கோவில்களின் வரலாறுகளில் பக்திரசம் ததும்பவேண்டுமென்கிறார், ஓர் சமயஅபிமானி. அன்னாரின் கூற்றை யாம் மிகவும் அன்புடன் வரவேற்கிறோம். பக்திநடையில் கோவில்களின் வரலாறுகளை எழுதினால் அதனை விரும்பிப் படிக்கக் கூடியவர்கள் மிகவும் சிலரே! ஆதலினாற்றான் பாலன் முதல் பட்டதாரிகள் வரையும் படித்து இன்புறத்தக்கதாக யாம் எழுதிய தமிழ்வசன நடையைக் கையாளுகிறோம்.

இன்னும் பல அன்பர்கள் எழுதுகிறார்கள் அன்னார்கட்கு எம் வணக்கம் உரித்தாகுக

மட்டக்களப்பிலிருந்துசுமார் 46மைல்களுக் கப்பாலுள்ள திருக்கோவிலென்ற கிராமத்தை அழகுறச்செய்கிறது சின்னக் கதிர்காமச்சந்நிதி. இதன்கண் எழுந்தருளியிருக்கும் சித்திரவேலாயுதர் என்ற சிறப்புப்பெயரைக்கொண்ட முருகவேளின் புகழ் வானளாவப்பறந்தது. ஆம் சின்னக் கதிர்காமத்தின் பெயரைக்கொண்டே கிராமத்திற்கும் பெயர் ஏற்பட்டதெனில் அவரின் புகழ் வரையறுக்கமுடியாது.

பலநூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குமுன்னர் இன்று திருக்கோவிலென்றழைக்கப்படும் கிராமம் கந்தப்பாணந் துறையென்று வழங்கப்பட்டுவந்தது. இக்காலையிற்றான் கண்டியில் நாயக்கமன்னராட்சி செவ்வனே நடைபெற்று வந்தது. விக்கிரமசிங்கனின் பெரியதந்தையான இராசாதிராசசிங்கன் (1780-1798] செங்கோல்செலுத்திய காலையிற்றான் இவ்வாலயம் எழுப்பப்பட்டதென்று சொல்லலாம். அப்போது சின்னக் கதிர்காமத்தின் முகப்புவாசல் கடலைப்பின்னோக்கிக் கட்டப்பட்டது. கும்பாபிஷேகம் நடத்திமுடிந்த அடுத்தநாள் மக்கள் சென்று பார்

க்கும்போது கோவில் வழமைக்கு மாறாக கடலைமுன்னோக்கித்திரும்பியிருக்கக்கண்டனர். எந்தவிதமான சிதைவும் இல்லாதுஆலயம் மறுபக்கமாகத்திரும்பியிருந்தமையினால் ஆண்டவனின் சந்நிதிக்கு திருக்கோவில் என்ற காரணப்பெயரைச்சூட்டினார்கள். காலகதியில்கோவிலின் பெயரே ஊருக்குமாகி கந்தப்பாணந்துறை என்ற நாமம்மறைந்து திருக்கோவிலென்று வழங்கலாயிற்று.

கோவிலின் அர்ச்சகரான "வேதகிரியார்" என்பவர் மன்னனிடஞ்சென்று எம்பெருமானின் திருவருளைக்கூறினார், அதனை கேட்ட மன்னன் அவருக்கு ஏராளமான சன்மானங்களைக் கொடுத்து சின்னக்கதிர்காமப்பெருமானை நான் வந்து சேவிக்கிறேன் என்று கூறினான். அன்றுதொட்டு சின்னக்கதிர்காமம் என்றபெயர் வழங்கலாயிற்று. அந்நாட்களில் கண்டியிலிருந்து கதிர்காமம்வரையும் ஓர்பாதை அமைக்கப் பட்டிருந்தது. அதனை மக்கள் "கண்டியன்கட்டு" என்றழைத்தார்கள். ஆனால் பாதையழிந்துவிட்டது. அதன் பெயர்மட்டும்இன்னும் சிரஞ்சீவியாகத்திகழ்கிறது.

மன்னன் அடிக்கடிவந்து சின்னக்கதிர்காமச் சித்திரவேலாயுதரைச் சேவித்துச்சென்றான். அவனுக்குப்பின்னர் முடி சூடிய சிறிவிக்கிரமசிங்கனும் எம்பெருமானை தவறாது வந்து சேவித்துச் சென்றிருக்கிறான்.

கண்டிமன்னர்களால் போற்றப்பட்ட தலம், கதிர்காமயாத்திரீகர்களுடைய வணக்கத்திற்கும் உரியதாகத் திகழ்கிறது. கதிர்காமப்புண்ணிய பூமியில் மிதிக்கமுன்னர் திருக்கோவில்புண்ணியபூமியில் மிதித்து சின்னக்கதிர்காமத்தில் பள்ளிகொண்டிருக்கும் சித்திரவேலாயுதரைச் சேவித்து வணங்கித்தான் மேலே செல்லுவார்கள்.

எம்பெருமானின் ஆலயம் பண்டையவழமைப்படி அமைக்கப்பட்டிருப்பதனால் புதுமையானவிசித்திரங்க ளொன்றுமில்லை. ஆலயம் சிறியதுதான். சுமார் 40 அடி நீளம் கொண்டதாகத்திகழ்கிறது. ஆனால் மூலஸ்தானத்தை ஆதாரமாகக்கொண்டு எழுப்பப்பட்ட சிகரம் புதுமையானது; பக்திவெள்ளத்தை அள்ளித்தெளிக்கத்தக்கதான சிற்பங்கள் ஆண்டவனின் அருளை அடுக்காகக்



காட்டும்விந்தையில் எவராவது சொக்கி எம்பெருமானைச் சேவியாது செல்லமாட்டார்கள்.

கோவிலின் முன்பு ஓர்மணிமண்டபம் எழுப்பப்பட்டுள்ளது, இதனைப்பிற்காலத்திற்றான் நிர்மாணித்தார்கள். இதனுள் கருங்கல்லினால் செதுக்கப்பட்ட ஓர்பலிபீடத்தை காணுந்தோறும் மனதிலே பக்திவெள்ளம் ஊற்றெடுத்து கரைபுரண்டோடும். இதில் முன்னர் மிருகங்களைப்பலியிட்டார்கள். தற்போதுதேங்காய்களை பலியிட்டு முருகவேளைச் சேவித்துச் செல்கிறார்கள் பக்தகோடிகள்.

முன்னர் இவ்வாலயம் ஒரு சாராருக்கு மட்டும் சொந்தமாக இருந்தது. தற்போது அனைவருக்கும்சொந்தமாகத்திகழ்கிறது. தீண்டாமையென்ற பேய்க்கு முதல்சாவுமணியடித்த சின்னக்கதிர்காமத்தை மெச்சாதவர்கள் கிடையாது.

கதிர்காமத்தைப்போன்றே இங்கும் 21 திருவிழாக்களை நடத்தி ஆடிப்பூரணையில் தீர்த்தோர்ச்சவத்தை எதிரேயுள்ள ஆழ்கடலில் நடத்துவார்கள். கோவிலைப்பஞ்சாயக்குழுவினர் பராமரித்து வருகிறார்கள். இவர்களைக்கோவிலார் என்று சிறப்பு விருதுடன் அழைப்பார்கள்:

கோவிலில் அர்ச்சனை நடத்தி ஆண்டவனுக்கு நைவேத்தியம் செய்து வருபவர்கள் பரம்பரையாக அன்றுதொட்டு இன்றுவரையும் தந்தைக்குப்பின்மகன் என்ற தோரணையில் இருந்துவருவது எம்பெருமானின் திருவருளேயாகும்.

கிழக்கிலங்கையில் தனியொரு மாண்பைக்கொண்ட சித்திரவேலாயுதர்சன்னதி. சின்னக்கதிர்காமமென்றுபோற்றப்படுவது உண்மையில் தனியொரு பக்திக்கு இடமானது. அந்தவகையிற்றான் இத்தலம் கதிர்காமத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது.

ஈழநாட்டிலும் இந்தியநாட்டிலுமிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்களைத் தன்வசம் வரவழைக்கும் சக்தியைக்கொண்ட கதிர்காமப்பெருமானின் அருள் சின்னக்கதிர்காமத்திற்குப் பரவியுள்ளது. ஆம் அந்தவகையில் கிழக்கு இலங்கையினூடாகக்கதிர்காமத்தைத் தரிசிக்கச்செல்லும் பக்தர்களின் வணக்கத்திற்கு

ரிய சின்னக்கதிர்காமச் சித்திரவேலாயுதரின் புகழ் திக்கெட்டும் பரந்தது. தன் அருளைத்தெள்ளெனக்காட்ட கோவிலைத்திருப்பி வைத்த சித்திர வேலாயுதரின் பெருமை வானளாவப் பரந்தது அப்பெருமானைச்சேவித்து வணங்கிப் பிரசாதம்பெறுவது வாழ்வில் ஓர் புனிதமான திருநாளாகும்.

---

127ம்பக்கத்தொடர்ச்சி (நலந்தரும் சொல்)

நக்கீரர் "ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகா! என்றோதுவார் முன் என்றும்

கூறியமந்திரமொழிகளைக்கவனித்தால்

ஞானம்பெறவும், மெய்ப்பொருள் காணவும்; உண்மையை உணரவும்; வீடடையவும், இறைவனைக்காணவும், எவ்வகை இன்பத்தை எய்தவும் சொல்லறச் சும்மா இருக்கவும் நினைப்பற நினைக்கவும், எக்காலத்திலும் எந் நிலையிலும் எவர்க்கும் ஏற்றதோர் நேரிய வழி.

இறை நாம பஜனையே, சிவகாமசிந்தனையே; நிறைநாம செபமேயாகும். இதனை

"குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுந்துயர் ஆயின எல்லாம், நிலந்தரும் செய்யும், நீள்விசும்பு அருளும் அருளொடு பெருநில மளிக்கும், வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயினசெய்யும், நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்."

என்னும் தேன்மதுரக்கவியில் திருமங்கையாழ்வார் எவ்வளவு தெளிவாகக்கூறியுள்ளார்.

சிவனடியார் 'நாராயணா' வென்னும் இடத்தில் 'நமசிவாய என்று பாடி நயக்கலாம். அப்பனே, நலம்பெற வேண்டுமா? வேண்டுமாயின், 'நாராயணா! 'நமச்சிவாய!/ முருகா! என்றுசொல் இச்சொல்லே ஆரா நலம்தரும் நலம் தரும் சொல்!

---



# சிருஷ்டி.

ஆற்றங்கரையில் ஒருமணல் மேடு, மணல் மேட்டில் ஒருநாள் கையில் பாரதசக்தி மகாகாவியம், திறந்தேன் சிருட்டிப்படலம். சிந்தனை சுழன்றது:

இந்த உலகத்திலுள்ள எண்பத்துநான்கு நூறுயிர யோனி பேதமும் எங்கேவந்தன? எப்படிவந்தன? எதனால் வந்தன? இந்தப் படைப்புக்குத்தான் முடிபென்ன? இந்த உயிர்கள் எல்லாம் வாழ்வதன் பண்பை எனக்கருள்வாய் சக்தியே என வேண்டினேன். ஓம் எனும் மந்திரத்தால் உலகை உயிர்ப்பித்த அன்னை பராசக்தி என்னுளத்தே நிலைபெற்று அருள் விழியைத்திறந்தாள். அப்போ காட்சி உதயமானது.

வானம் முதலாகிய ஐம்பூதங்களை வகுத்தும் தொகுத்தும் படைத்தல் முதலாகிய ஐந் தொழில்களையும் சக்தியால் இயற்றி தேவர்முதலான எழுவகைத் தோற்றமும் மகிழ ஞானநடம்புரிகின்றான் நடராஜன். உலகை ஆக்கும்போது அயனாகவும் காக்கும் போது அரியாகவும் நீக்கும்போது அரனாகவும் பெயர் பெறுகின்றான்.

ஊழிவெள்ளம் வந்தது. உலகுயிர்யாவும் ஊழிக்குஇரையாயின. பஞ்சபூதங்கள் பிரிந்தன; பரந்தது வெறுமை. பரமாத்மன் துரியமாமுடி மேல் துயின்றான். அகமகிழ்வினால் உலகை ஆக்குவான்; காப்பான்; யுகமுடிவில் அழிநடம்புரிவான்; உலகில்எல்லாவற்றிலும் நிறைந்திருப்பான். அவனது பதம் துதிப்பதே எமது தொழில்.

அன்னை பராசக்திஅழுறக்கம் விட்டெழுந்தாள். எல்லாம் அழிந்ததை அறிந்தாள். பாழுறக்கம் விட்டுப் பரமனை எழுப்பினாள். உயிர்க்குயிராய் விளங்கும் பொருளே! கோபத்தை நீக்கிப் புதுப்புவியைக்கண்டு அருளாய். அளவிலா உயிர்த்தொகுதிகள் யாவும் உணர்வு, ஒளி, உரு, சுவை, மணம்யாவும் வரண்டு தெளிவிலாத சூனியமானதே. நீயே உலகெலாம் நிறைவாயாக.

மங்களச்சிவசக்தியே உன் நயமொழிக்கு மகிழ்ந்தேன். முத்தொழில் பூவுலகில் பொலியும். உலகெங்கும் என் மயமாகவே நீ

கோவில் கொண்டிருப்பாய். உன்னோடு உறங்கிய பூமி உன்னோடு விழிக்கும். ஓம் என்னும் இசையை இசைப்பாய்; புதுயுகம் பொலிந்திடும்

"ஓமெ னும்திரு மந்திரம் உலகினை யாக்கும்
ஓமெ னுந்திரு வொலியதே உயர்மறைப் பொருளாம்
ஓமெ னும்பர நாதமே உண்மையின் பறிவாம்
ஓமெ னுந்தமி ழிசையினை யுளமகிழ்ந் திசைப்பாய்"

அன்னைபராசக்தி ஓம் எனும் மந்திரத்தை ஏழிசையோடு சேர்த்து மீட்டினள். பாழடைந்த இடத்தில்உலகுதோன்றியது அகரத்தால் ஆகாயம் விழித்தது. உகரத்தால் அணுக்கள் வளர்ந்தன, மகரத்தால் அணுக்கள் சுழன்றன. நாரணன் அணுவெலாம் நிறைந்தான். பிரமன் வேதம் ஒலித்தான், சோதிபூத்தது. சுடர்மணிக் கணங்களும் பூத்தன. வெளிநிறைந்தது; முகில்தோன்றிமழை பொழிந்தது. இயற்கை வளங்கள் யாவும்வளர்ந்தன, இமயம் வானளாவ உயர்ந்து நின்றது;

ஆதியெம்பெருமானே தீதிலாத்தவம் பொலிய பூமிக்கெல்லாம் ஞானவிளக்காய் அமையும்படி சோதிநாடொன்று தோற்றுவிப்பாய் எனவேண்டினள்பராசக்தி.

தேவியே நல்லது சொன்னாய். அச்சோதிநாட்டை நாம் புண்ணியபூமியென்போம், தலைமையாகவிளங்கும்புண்ணியபூமியே தருமத்திற்கு இருப்பிடமாகும்,

சுத்த சச்சிதானந்த சொரூபரே இப்பூமியை எனது இன்ப வீடாக்கினீர். அறிவாற்றலும் அருளுணர்வும் ஆத்ம சக்தியும் விளங்குகின்ற மானிடத்தைப் பூமியிலே படைப்பீராக.

என்னிலே ஆண்மை அறிவுடன் எழுவதாக. உன்னிலேபெண்மை அன்புடன் பொலிவதாக. இரண்டும்இணைந்து மங்கல மானிடமரபாகவிளங்குக. பஞ்சபூதங்களாலான்யாக்கையில் பொறிபுலன் கரணங்கள் பொருந்தி நாதவிந்து கலாதியாய ஆத்தும நாதன் அறிவாய்ப்புகுந்து உயிர்வாழ்வினை இயக்ககுற்றமில்லாத திருக்கோலங்கள் இரண்டெழுந்தன.

மனு மதி என்னு மிவர் மூலமாகமனையறம் செழித்து மனிதமரபு விளங்குக எனச்சக்தி வாழ்த்துக் கூறினள். இனிமானிடர் நிலையென்ன? எனப்பரமனைக்கேட்டாள் பராசக்தி.



# இனியும் வருமோ!

['ஆசைமுகம் மறைந்து போச்சே' -என்றமெட்டு]

பக்தி வெறிமறைந்து போச்சே! —உன்னை
பாடும் நினைவொழிய லாச்சே—என்
சித்தம் கொடிய இரும் பாச்சே!-விழி
சிந்தும் புனல் மறைந்து போச்சே!

எண்ணி உருகும்மனம் எங்கே? —உடன்
இளகித் துவளும்உடல் எங்கே?-தமிழ்ப்
பண்ணில் கமழும்சுவை போலே—என்னுள்
பாய்ந்து கலக்குமின்பம் எங்கே?

ஆழ்ந்த சிந்தனைகள் எங்கே? நெஞ்சில்
ஆடும் ஒளித்திரள் எங்கே? இங்கு
வாழ்ந்த நாளிதிலே கண்ட—தெல்லாம்
மாய்கை யென்மறைய லாச்சே!

கற்பதும், கேட்பதுவும், வாயால்—பேசிக்
காலங் கழிப்பதுவு மன்றி —உன்
பொற்பதம் தனையெண்ணி யுருகும் -அந்தப்
புனிதநாள் இனியும் வருமோ?

-"பரமஹம்ஸதாஸன்"

---

முற்பக்கத்தொடர்ச்சி

"ஈசன் யான்வளர் மானிடம் எனையறி யாது
பாச முற்றிடிற் பவவினை பற்றிநீ டலையும்
நேச மென்னிடை நினைத்திடின் அருளுணர் வோங்கிப்
பாச நீங்கிடும் பதியினைக் கூடிடும் பசுவே"

"முக்குணம் பெறு மாயையின் முடிவறு வலையிற்
புக்கு மானிடர் இருவினைப் போர்களை விளைப்பார்
பக்கு வம்பெறு ஞானிகள் பதைப்பறப் பார்த்தே
எக்கு ணத்திலுந் தோய்வுறார் என்னிலே இருப்பார்"

# சாதனைக் குறிப்புகள்.

சுவாமி இராமதாசர்
(மொழிபெயர்ப்பு விசாகர்)

---

நிறைந்த அன்பும் கருணையுமான கடவுளைக் கூவியழை. உன்னை ஏற்று தனது ஜோதிமயமான இன்பமயமான குழந்தையாக்கும்படி பிரார்த்தி. அவனருள் உன்னைத் தூய்மையாக்கி சக்தியளித்து உன்னையே முழுவதும் ஏற்றுக்கொள்ள இடங்கொடு. உன்னுடையவெல்லாவற்றையும் அவனுக்கு அர்ப்பணஞ்செய்து, உன்உள்ளும் புறமும் அவன் உறைவதை உணர்.

குறித்த நேரங்களில் தியானமும், எல்லா நேரங்களிலும் கடவுள் நினைவும், எல்லாச் சாதகர்களுக்கும் முக்கியமானது. கடவுட்பசியையும் கடவுள் தாகத்தையும் வளர். அப்பசி இல்லாததில் அதிருப்திகொள். அசிரத்தையான விருப்பினால் அதிகபலன் ஏற்படாது. ஆவலான பசியைத்தரும்படி இறைவனைப் பிரார்த்தி. சாதனையில் அப்பசி உனக்குக்கிடைக்கும். பூரணமாகவும் உறுதியாயுமிரு. ஒழுங்கீனமாகக் கருமங்களைச் செய்யவேண்டாம். நாளுக்குநாள் சாதனையிலுள்ள சிரத்தை அதிகரிக்கட்டும்.

சாதனைசெய்யுங்காலத்தில் சித்திகளைப்பற்றியெண்ணத்தால் கவலையுறாதே. முதலில் கடவுளை அடை, மற்றவை எல்லாம் தானாகவே உனக்கு வரும். சாதனை ஒழுங்காகும்போது சகலசந்தேகங்களும் நீங்கும்.

ஆத்மசாதகரின் பாதை சுலபமானதல்ல, ஆனால் அவ்வழியால் முன்னேற உறுதிகொண்டவன் லட்சியத்தை அடைவது திண்ணம்.

மனத்தை அடக்கித் தீயஎண்ணங்களிலிருந்து அதை விடுவிப்பதற்கு உன் வாழ்வைத் திடமான ஒழுங்கிற்கு உள்ளாக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாய், மெல்லநுழையும் சோம்பலுக்கும் செயலின்மைக்கும் உள்ளாகாதே. சாதகனின் முன்னேற்றப்பாதையில் சோம்பலைப்போன்ற பெரிய சத்துராதிவேறொன்றுமில்லை. தெளிவான நியதிகள் பின்வருமாறு!



1 காலையில் ஐந்துமணிக்குப்பின் தூங்காமல் எழுந்திரு: 6மணிவரையுள்ள 1மணிநேரத்தை இறைவன் நாமத்தைச்செபிக்கவும் அவனின் உயரியகுணங்களைத் தியானிக்கவும் பயன்படுத்து.

2 சாத்வீக உணவையே உட்கொள். அதாவது காரமில்லாத உணவைக் கொள்ளுவதும்எழுச்சிதரும் பொருட்களைவிலக்கலும்.

3 கீழ்த்தரமானதும் புலனுணர்ச்சி தரக்கூடியதுமான எதையும் வாசிக்கவேண்டாம். ஆனால் ஞானிகளின் வரலாறுகளையும் அவர்களின் உபதேசங்களையும் வாசித்துக்கொண்டிரு:

4 மத சம்பந்தமாகவோ அல்லது வேறு எது விஷயமாகவோ எவருடனும் வாதாடவேண்டாம்.

5 உன் பழக்கவழக்கங்களில் அடக்கமாகவும் ஆடம்பரமின்றியும் இரு.

6 அனுதாபத்தையும் உதவியையும் வேண்டும் எல்லோரிடத்தும் நன்மையாகவும், அன்பாகவும் பயன்படக் கூடியதாகவும் இரு.

7 இதரவேலைகள் இல்லாதநேரங்களிலெப்பொழுதும் கடவுள் நாமத்தை உச்சரி.

8 தனிமையில் விருப்பங்கொள். இறைவனுடன் அதிகமாக உனது எண்ணத்தை இணைப்பதற்கு அமைதியான தனி இடத்திற்கு அடிக்கடி செல்.

9 ஞானிகளின் சகவாசத்தை நாடு.

10 பிரம்மச்சாரியத்தைக்கடைப்பிடி.

11 புலனின்பத்தில்மூழ்கி இருப்பவரின்சகவாசத்தைநாடாதே.

12 எண்ணஞ்சொல் செயல்களில் உன்னைப்பூரணமான தூய்மையாய் வைத்துக்கொள்.

நன்கு ஒழுங்குபடுத்திய வாழ்வும், தொழிலில் ஊக்கமும்

சாந்தமும், சந்தோஷமுமான இயல்புமே கடவுளுடையஉண்மை அடியாரின் குறிப்பான குணங்கள்.

உணர்ச்சி வேகத்திற்கு உள்ளாகி இப்போதுள்ள உனதுவாழ்வின் போக்கை மாற்றி, பின் பச்சாத்தாபத்திற்கு இடங்கொடாதே. உன்னுடைய நித்திய நிலையில் உணர்வும்; மனித சமுதாயத்திற்குத்தன்னலமற்ற சேவையுமே உனது லட்சியம். இப்போதிருக்கும் நிலையில் இருந்தே இந்த உன்னத லட்சியத்தை அடையும் வழியை நீ தொடங்கவேண்டும். உழைப்புங்கஷ்டமும் அங்கிருக்கவேசெய்கிறது. கடும் முயற்சியின்றிப் பெருமையாக எதையும் அடையமுடியாது.

தெய்வீக மந்திரஜெபமேமனம்குவிவதற்குச்சுலபமானவழி. காலையிலும் மாலையிலும் கடவுளை நினைப்பதில் சிலநேரத்தைச்செலவிடு. பகவத்கீதையை ஒவ்வொரு நாளும்வாசி. சுத்தமான எளியவாழ்க்கையை நடத்து. உன்னைச்சேரும் எல்லோரிடத்தும் அன்புள்ளவனும் உதவி உள்ளவனுயும் இரு. வருந்துவோருக்கும் வேண்டுவோருக்கும் செய்யும் சேவையே இறைவனுடைய சேவையென நம்பு.

நீ உன்னைப்பற்றிப்பேசாதே. பிறர் பேசுவதற்கும் ஊக்கம் அளிக்காதே. தற்குறிப்புகள் எல்லாவற்றையும் தவிர். எப்போதும் ராமனைப்பற்றியே பேசு. அவன்பெருமை-அவன் சக்தி அவன் சாந்தம்-இவைகளைப்பற்றியேபேசு. வெளித்தோற்றங்களையும் பகட்டுகளையும்விடு, சிலத்தின் தோற்றத்தைத் தாளும் விடு. சாயந்தரவேளைகளில் மிதமான உணவைச்சாதகன் உண்ணவேண்டும். மட்டான நித்திரையே அவன்கொள்ளவேண்டும். மாலையிலோ பகலிலோ அவன்நித்திரை செய்தல் கூடாது. உலகதொடர்புகளை அவன் விலக்கவேண்டும்.



# செய்தித்திரட்டு.

## ஸ்ரீஇராமக்கிருஷ்ணபரமகம்சரின் திருவவதாரதினம்

ஷை தினம் பண்ணாகம்மெய்கண்டான்பாடசாலை மண்டபத்திலும் வெள்ளவத்தை ஸ்ரீ இராமக்கிருஷ்ண ஆச்சிரமத்திலும் கடவளை ஸ்ரீ சித்திலிங்கமண்டபத்திலும் அக்கரைப்பற்று விபுலானந்த மணிமண்டபத்திலும் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டதென்றும் பல அறிஞர்கள் பரமகஹம்சரின் வாழ்க்கையும் உபதேசமும் என்பதுபற்றி சொற் பொழிவாற்றினார்களென்றும் கடித மூலம் அறிந்து அகமகிழ்கிறோம்.

## தெல்லிப்பளை பாலர்ஞானோதயசபை

15-3-52ல் ஷை சபையின் ஆண்டுவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. சபையின் சார்பாக நடாத்தப்பெற்ற சமயபாடப்பரீட்சையில் 42மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்.

## விழித்தெழு

எடுப்பு

விழித்தெழுந் திருமன்மே!-துயிலினின்று (விழி)

தொடுப்பு

கிழிந்தெறிந்திருள்திரை; ஒளித்திரு நகையுடன்
கிழக்கில்ஞா னக்கதிரோன் கிளம்பும் தருணமிதே (விழி)

முடிப்பு

பூத்தன மலரினம்: ஆர்த்தன புள்ளினம்
பொங்கின புதுமணம்; மங்கின் இருட்கணம்
வாய்த்தநல் லெழிலுடன் வாழ்க்கையில் புகுந்தின்ப
மாதவன் பணிசெய்வோம்! மயக்க மொழிந்துடனே [விழி)

பஞ்சபுலப் போர்வை துவம்சமுறக் கிழித்து,
பாழுங்கா மச்சிறுக்கி வாழ்வின்கோட் டமழித்து
வெஞ்சின விருளாசை வஞ்சப் பொறமையுடன்
வினைவளர்க் கும்அகந்தை யினையின் றேடேயொழித்து [விழி]

—'பரமஹம்சதாசன்'

# தெல்லிப்பழை காசியிற் பிள்ளையார்,

(சி. கணேசலிங்கஐயர்)

இந்த விநாயகர் ஸ்தலம் பலவளங்களும் சிறந்து விளங்கும் யாழ்நகரின்கண்ணே, தெல்லிப்பழையென்னும் ஊரிலே வீணாக்கடவையென்னும் திருப்பதியிலே காங்கேயன்துறைக்குச்செல்லும் வழியிலே, தெல்லிப்பழை நாற்சந்திக்கும், மல்லாகம் நாற்சந்திக்கும் இடையே தெருக்கரையோரமாக அமைந்துள்ளது. இக்கோவிலுக்கும் காங்கேயன் துறைமுகத்திற்கும் மூன்றரைமைல் தூரம் வரை உண்டு. இதன் புராதன மகிமைகளைப்பற்றியும் இதற்கு "காசியிற்பிள்ளையார்" என்னும் திருநாமம் வந்தகாரணத்தைப் பற்றியும் ஆராய்வதே இச்சிறுகட்டுரையின் குறிக்கோளாகும்.

ஆதிகாலத்தில் ஓர்வயதுபோன அம்மையார் தெல்லிப்பழையினின்றும் காசியாத்திரையின் பொருட்டுகாசிக்குச் சென்றதாகவும் அவ்வாறுசென்ற அம்மையார் மீண்டும் வரும் போது ஓர் விநாயகர் இலிங்கத்தைக் கொண்டுவந்து வீணாக்கடவையென்னும் காணிக்குள் வைத்துக் "காசியிற்பிள்ளையார்" என நாமஞ்சூட்டி வழிபட்டதாகவும் அதனாலேயே காசியிற் பிள்ளையாரென்னும் திருநாமம் வரப்பெற்றதென்பதும் கர்ணபரம்பரைக்கதையாகும் (காசியினின்றும் வந்த அந்தணர் சிலர் கொண்டு வந்ததாகவும் கூறுவாருமுளர்.) இதன் உண்மையான வரலாற்றைத் திட்டமாக அறிந்துகொள்ளமுடியவில்லை. எதுவாயிருப்பினும் சரி, காசியிலிருந்து வந்தகாரணத்தாலேயே காசியிற்பிள்ளையார் என்னும் திருநாமம் வரப்பெற்றதென்பதை நாம் திடமாக நம்பகூடியதாகவிருக்கிறது.

மேலும் இந்த விநாயகர் ஸ்தலத்தைப்பற்றி இன்னுமோர் அற்புதசரிதையொன்று காலங்கண்ட முதியோராற் கூறப்படும். அதுஎன்னவெனில் ஷை அம்மையார் இலிங்கத்தைவைத்து வழிபாடுசெய்துவரும் நாளிலே ஓர் விருக்ஷம் தானகவே உற்பத்தியாகி பெரியமரமாகவளர்ந்துவந்ததென்றும் (ஆங்கிலேயர்முதலாக) எத்தனையோ நிபுணர்கள் வந்து பார்த்தும் அந்தவிருக்ஷம் எவ்வினத்தைச்சேர்ந்தது? அதன்நாமம் இன்னது? என்றுஅறிய இயலாது சென்றுவிட்டார்களெனவும், விருக்ஷத்தின்கீழ் எம்



பெருமான் எழுந்தருளியிருக்கும்போது அன்பர்வேண்டிய வரங்கள் யாவற்றையும் ஈய்ந்து, அளவற்ற திருவிளையாடல்களையும் புரிந்தாரென்றும் இவ்வாறிருந்து வரும்நாளில் ஓர் கரிஜனம் மதுவை உட்கொண்டமை காரணமாகத் தனது காலினால் இத் தெய்வத்தன்மை பொருந்தி விருக்ஷத்திற்கு உதைத்தானெனவும். உடனே அந்த அற்புத விருக்ஷம் இலைகள் யாவும் கருகிப் பட்டுவிட்டதென்றும், எம்பெருமானது தெய்விக விருக்ஷத்திற்கு உதைத்த கரிஜனம் மூன்றுமாத எல்லைக்குள், அக்காலில்பெருநோய் ஏற்பட்டுத் தாங்கொணாவேதனைக்குள்ளாகி, இறந்தானெனென்றும் கூறுவர். விநாயகப் பெருமானது திருவருளோடு கூடிய தெய்வீகவிருக்ஷத்தை, இக்காலமக்களாகிய நாம் காணும்பேறு இல்லாதொழிந்தது, சிற்றறிவினராகிய நாம்செய்த புண்ணியம் போதாமையே என்று ஊகிக்கவேண்டியிருக்கிறது.

மேற் கூறிய தெய்வீகவிருக்ஷம் இல்லாதொழிந்ததும் விக்கினேஸ்வரப்பெருமானுக்கு ஓர் ஆலயம் வேதாகம முறைப்படி கட்டவேண்டுமென்ற பெருவிருப்பினால் உந்தப்பட்ட தெல்லியம்பதிவாழ்சைவப்பெரியார்களும், தருமசீலர்களும் ஒருங்குசேர்ந்து வீணாக்கடவை என்னும் காணிக்குள், காசிவிநாயகருக்கு ஓர் ஆலயம் சிரியமுறையில் அமைத்தார்கள். கட்டடம் ஆதியில் விருக்ஷத்தின்கீழ் இருந்தமுறைப்படி, மேற்கு வாசலையுடையதாகவும் விஸ்தீரணமான மண்டபங்களைக் கொண்டதாகவும் அமைத்தார்கள். பின் கும்பாபிஷேகம் வேதசிவாகமமுறைப்படி நடைபெற்றது. கும்பாபிஷேகத்தின்போது காசியினின்றும் மேற்படி அம்மையாரால் கொண்டுவரப்பட்ட இலிங்கத்தையும் பிறிதோமுடரித்தில்வைத்து அதற்கும் ஆகமமுறைப்படி அஷ்டபந்தனஞ்சாத்திக்கும்பாபிஷேகம்செய்தார்கள்.

இவைகளைத்தவிர, வருடாவருடம் ஆவணிச்சதுர்த்தி, விநாயகர்ஷஷ்டி, மார்கழித்திருவாதிரை, தைப்பொங்கல், தைப்பூசம் தீபாவளி, சித்திரைவருடப்பிறப்பு, மகாசிவராத்திரி, ஆகிய விசேடகாலங்களில் விசேட அபிஷேகங்களும் திரு விழாக்களும் சீரியமுறையில் நடைபெறும், தெல்லிப்பளைகிழக்குக்கு இதுவே புராதனமானதும், பெரிதாகவும் உள்ளவிநாயகர் கோவிலெனலாம்

Registered at the G. P. O. as a Newspaper No. H. C. 52-300


# நால்வர் படங்கள்.

நால்வர் படங்கள் பெரிய அளவில்

ரவிவர்மா

கலர் மாதிரியில் தயாரிக்கப் பெற்றவை.

ஒவ்வொரு சைவர் இல்லங்களிலும் தவறாது இருக்கவேண்டியது.

படம் ஒன்றுக்கு தபாலசெலவு உள்பட ரூபா **2-00**

**சரவண அச்சகம்— நாவலப்பிட்டி.**

---

சத்கோண ஷண்முகப்பிரகாசம்,

சரவணபவ எழுத்துப்படம்,

இவையிரண்டுபடங்களும்

**B. S.** கலிகிராஜு செட்டியாரால்

வெளியிடப்பெற்றவை.

பூஜைக்கும், பார்வைக்கும், தியானத்திற்கும் சிறந்தவை.

படம் ஒன்றுக்கு விலை ரூபா. **1-50**

**பாலதண்டபாணி பிக்சர் ஹவுஸ்**

குமாரவீதி திருப்பூர் [S. I. RY]

---

**தியானமாலை**

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்களால் எழுதப்பெற்றது.

சாதகர்கள் ஒவ்வொருவரும் பயன்பெறத்தக்க நூல்.

விலை ரூபா **1-50**

**M. O.** முருகேசபிள்ளை அன் சன்ஸ் நாவலப்பிட்டி.


---


கௌரவ ஆசிரியர் க. இராமச்சந்திரன், பதிப்பாசிரியர் நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, இலங்கை

அச்சுப்பதிப்பு சரவண-நாவலப்பிட்டி 10-3-52